දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2784825

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. …………………………

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල
"இசுருபாய" ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ED/5/77/09/01/FR135/2017

දිනය / திகதி / Date 2017.02.28

சுற்றறிக்கை இலக்கம் : 12/2017

செயலாளர், கல்வி இராஜாங்க அமைச்சு
சகல மேலதிக செயலாளர்கள்
பிரதம நிதி உத்தியோகத்தர்
ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
பணிப்பாளர் நாயகம், டவர்கோள் மண்டபம்
தலைவர், இலங்கை கலை சபை
பணிப்பாளர், ஜனகலா கேந்திரம்
தலைவர், பகிரங்க நடனக் கட்டுப்பாட்டு சபை
சகல பிரதம கணக்காளர்கள்
செயலாளர் நாயகம், இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு
பிரதம ஆணையாளர் (கல்வியியற் கல்லூரி)
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
நிகழ்ச்சித் திட்டப் பொறுப்பாளர் (ESDP/ SMTSU)
சகல செயற்திட்டப் பொறுப்பாளர்கள்
சகல விடயங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர்கள்
சகல கணக்காளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகள்

**<u>நிதி ஒழுங்குக் கோவை 135 இன் கீழ் அதிகாரங்களை வழங்குதல் - 2017 ஆம் ஆண்டு</u>**

01. கல்வி அமைச்சின் செலவினத்தலைப்பு 126 இன் கீழ் நிருவகிக்கப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்குரியதாக செலவின நிருவாகம் தொடர்பாக நி.ஓ 135 இன் கீழ் அதிகாரத்தை வழங்கும் உப ஆவணம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ் அதிகாரங்களை வழங்கும் வகையில் பிரதானமாக 04 செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அதாவது அதிகாரத்தை வழங்குதல், அங்கீகரித்தல், உறுதிப்படுத்தல் மற்றும் கொடுப்பனவாகும். இச் செயற்பாடுகள் மற்றும் இவற்றின் பொறுப்புக்களின் வரைவிலக்கணத்தைத் தெளிவுபடுத்துவதற்காக நி.ஓ 136,137,138,139 ஐ பரீசீலனை செய்வது மிக முக்கியத்துவம் வாய்ந்தாகும்.

02. இங்கு நிதி எல்லைகளுக்கமைய செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது தாபன விதிக் கோவை, நிதி ஒழுங்குக் கோவை, பெறுகை வழிகாட்டல் கோவை, திறைசேரி / பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் வெளியிடப்படும் சுற்றறிக்கை உட்பட கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

03. வருடாந்த ஒதுக்கீடுகளின் இச் செயற்பாடுகளுக்கு செலவினங்களை மேற்கொள்ளும் போது அதனுடன் தொடர்புபடும் சகல உத்தியோகத்தர்களும் கூட்டாக மற்றும் தனித்தனியாக பொறுப்புக்கூறக் கட்டுப்பட்டுள்ளனர்.

04. பெறுகைச் செயற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளை முன்கூட்டியே ஆரம்பிக்க வேண்டும். தொழில்நுட்ப மதிப்பீட்டுச் செயற்பாடுகள், பெறுகை அங்கீகாரம் போன்றவைகளை முடியுமானவரை குறுகிய காலத்திற்குள் பூர்த்தி செய்ய வேண்டும். முறையாக அமுல்படுத்தப்படாத தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக புதிய உத்தியோகத்தர்களை நியமிப்பதன் மூலம் அப்பணிகளை வினைத்திறனுடன் மேற்கொள்ள வேண்டும்.

05. பெறுகை வழிகாட்டல் கோவை / செயற்சாதனைக் கோவை மற்றும் அதற்குரியதாக இடைக்கிடையே வெளியிடப்பட்டுள்ள மறுசீரமைப்புக்கள் (மேலதிகம்) இற்கமைய பெறுகை சபைகளின் நிதி எல்லைகள் உரியதாகும். தற்போது செல்லுபடியாகும். எல்லைகள் தங்களது வசதியினை அறிந்து கொள்வதற்காக உப ஆவணம் இலக்கம் 01 இன் கீழ் இத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

06. **சிறு கட்டுநிதி முற்பணம்** - நிறுவனப் பொறுப்பாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் உரிய உத்தியோகத்தர் சிறு கட்டுநிதி முற்பணமாக அதிகபட்சமாக ரூபா. 25,000/- ஐப் பேணுவதற்கும், அதன் மூலம் மேற்கொள்ளக்கூடிய கொடுப்பனவின் உயர்ந்தபட்சப் பெறுமதியினை 5000/- ரூபாவாகப் பேணுவதற்கும் இதன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 03/2015)

07. இச் சுற்றறிக்கை அமுல்படுத்தப்படுவது கல்வி அமைச்சினால் ஒதுக்கீடுகளை வழங்கும் பணிகள் சேவைகள் மற்றும் வழங்கல்களுக்கு மாத்திரமாகும்.

**சுனில் ஹெட்டிஆரச்சி**
செயலாளர் மற்றும் பிரதம கணக்கு
வழங்கும் உத்தியோகத்தர்
கல்வி அமைச்சு

**பிரதிகள்** -

01. கணக்காய்வாளர்

02. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ கணக்காளர் திணைக்களம், பொதுத்திறைசேரி

03. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

உப ஆவண இலக்கம் 01

| |
|---|
| பெறுகை வழிகாட்டல் உள்ளீடு: 2.14.1 |
| **01. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான பரிந்துரை/ நிர்ணயிப்பதற்காக பெறுகைக் குழுக்களின் அதிகார எல்லைகள்** |
| பொருட்கள், பணிகள் மற்றும் ஆலோசனை சேவை அல்லாத சேவைப் பெறுகைகளுக்காக போட்டிகரமான விலை மனுக்களைக் கோரும் ஒழுங்கு விதிகள் (வழிகாட்டல் ஆலோசனை 3.1, 3.2 அல்லது 3.3) நேரடி ஒப்பந்தமுறை (வழிகாட்டல் 3.5) அல்லது மீண்டும் கட்டளை வழங்கும் முறை (வழிகாட்டல் 3.6) பின்பற்றும்போது |

| **அதிகார சபை** | **இலங்கை அரச நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தம்** | **வெளிநாட்டு நிதியங்களினால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தம்** |
|---|---|---|
| அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக்குழு/ அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு | ரூபா. 200 மில்லியனை விட மேற்பட்ட | ரூபா. 600 மில்லியனை விட மேற்பட்ட |
| கல்வி அமைச்சின் பெறுகைக்குழு | ரூபா. 200 மில்லியன் வரை | ரூபா. 600 மில்லியன் வரை |
| மாகாணக் கல்வித் திணைக்களப் பெறுகைக்குழு/ செயற்திட்ட பெறுகைக்குழு | ரூபா. 100 மில்லியன் வரை | ரூபா. 300 மில்லியன் வரை |
| வலயக் கல்வி அலுவலகம்/ கல்வியியற் கல்லூரி பெறுகைக்குழு | ரூபா. 10 மில்லியன் வரை | ரூபா. 10 மில்லியன் வரை |

R.M.M.Rathnayaka
Chief Finance Officer

S.P.N.Samarasingha
Chief Accountant

பெறுகை வழிகாட்டல் உள்ளீடு : 2.14.1 (தொடர்பாக)

**பொருட்கள், பணிகள் மற்றும் ஆலோசனை சேவை அல்லாத சேவைப் பெறுகைகளுக்காக சந்தை விலையின் ஒழுங்கு முறைகளைப் பின்பற்றும் போது (வழிகாட்டல் 3.4)**

| அதிகாரசபை | பெற வேண்டிய குறைந்தபட்ச விலைகளின் அளவு | அதிகார சபையின் எல்லை (ரூபா. மில்) | |
|---|---|---|---|
| | | இலங்கை அரசின் நிதியம் | வெளிநாட்டு நிதியம் |
| கல்வி அமைச்சின் பெறுகைக் குழு | **பணிகள் :** முத்திரை பதிக்கப்பட்ட 05 விலை மனுக்களை விடக் குறையாத எண்ணிக்கை கோரப்படுதல் | 20 வரை | 20 வரை |
| | **பொருட்கள் மற்றும் ஆலோசனை சேவை அல்லாத சேவைள் :** முத்திரை பதிக்கப்பட்ட 05 விலை மனுக்களை விடக் குறையாத எண்ணிக்கை கோரப்படுதல் | 12 வரை | 18 வரை |
| | **பொருட்கள் மற்றும் ஆலோசனை சேவை அல்லாத சேவைள் :** முத்திரை பதிக்கப்பட்ட 03 விலை மனுக்களை விடக் குறையாத எண்ணிக்கை கோரப்படுதல் | 08 வரை | 08 வரை |
| மாகாணக் கல்வித் திணைக்கள பெறுகைக் குழு / செயற்திட்ட பெறுகைக் குழு | **பணிகள் :** முத்திரை பதிக்கப்பட்ட 05 விலை மனுக்களை விடக் குறையாத எண்ணிக்கை கோரப்படுதல் | 10 வரை | 15 வரை |
| | **பொருட்கள் மற்றும் ஆலோசனை சேவை அல்லாத சேவைள் :** முத்திரை பதிக்கப்பட்ட 05 விலை மனுக்களை விடக் குறையாத எண்ணிக்கை கோரப்படுதல் | 10 வரை | 15 வரை |
| | **பொருட்கள் மற்றும் ஆலோசனை சேவை அல்லாத சேவைள் :** முத்திரை பதிக்கப்பட்ட 03 விலை மனுக்களை விடக் குறையாத எண்ணிக்கை கோரப்படுதல் | 05 வரை | 05 வரை |
| வலயக் கல்வி அலுவலகம் / கல்வியியற் கல்லூரி பெறுகைக் குழு | **பணிகள் :** முத்திரை பதிக்கப்பட்ட 05 விலை மனுக்களை விடக் குறையாத எண்ணிக்கை கோரப்படுதல் | 02 வரை | 02 வரை |
| | **பொருட்கள் மற்றும் ஆலோசனை சேவை அல்லாத சேவைகள் :** முத்திரை பதிக்கப்பட்ட 05 விலை மனுக்களை விடக் குறையாத எண்ணிக்கை கோரப்படுதல் | 01 வரை | 01 வரை |
| பி.க.உ/ தி.வெ / செ.தி.ப | **பணிகள் :** முத்திரை பதிக்கப்பட்ட 03 விலை மனுக்களை விடக் குறையாத எண்ணிக்கை கோரப்படுதல் | 01 வரை | |
| | **பொருட்கள் மற்றும் ஆலோசனை சேவை அல்லாத சேவைள் :** முத்திரை பதிக்கப்பட்ட 03 விலை மனுக்களை விடக் குறையாத எண்ணிக்கை கோரப்படுதல் | ரூபா. 500,000 வரை | |

R.M.M.Rathnayaka
Chief Finance Officer

S.P.N.Samarasingha
Chief Accountant

பெறுகை வழிகாட்டல் உள்ளீடு 2.14.1 (தொடர்பாக)

சிறிய பெறுமதி கொண்ட பழுது பார்ப்புப் பணிகள், பொருட்கள் மற்றும் சேவை நேரடிக் கொள்வனவு (வழிகாட்டல் ஆலோசனை 3.5 அல்லது 3.6) (இலங்கை அரசின் நிதியம் அல்லது வெளிநாட்டு நிதியம் பயன்படுத்தப்பட்ட)

| அதிகார சபை | பூர்த்தி செய்யப்பட வேண்டிய பணிகள் | அதிகார சபையின் எல்லைகள் |
|---|---|---|
| பி.க.வ.உ / தி.பெ/ செ.தி.ப | **பணிகள்**<br>• வழிகாட்டல் ஆலோசனை 3.5 அல்லது 3.6 இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிமுறைகள் பூர்த்தி செய்யப்பட்ட | ரூபா. 500,000 வரை |
| | **பணிகள்**<br>• போட்டிகரமான விலை மனுக் கோரல் போதியளவு அமையாத பட்சத்தில்.<br>• பெறுகையில் சிக்கனமானது தொடர்பாக பி.க.வ.உ / தி.பெ/ செ.தி.ப உறுதிப்படுத்தப்பட வேண்டும்.<br>• இவ் அதிகாரம் பி.நி.உ/ தி.பெ/ செ.தி.ப இன் தனிப்பட்ட மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டியதுடன் வேறு நபர் ஒருவருக்குப் பொறுப்பளிக்கக் கூடாது. | ரூபா. 200,000 வரை |
| | **பொருட்கள் மற்றும் ஆலோசனை சேவை அல்லாத சேவைகள்**<br>• வழிகாட்டல் ஆலோசனை 3.5 அல்லது 3.6 இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிமுறைகள் பூர்த்தி செய்யப்பட்ட | ரூபா. 200,000 வரை |
| பி.க.வ.உ/ தி.பெ/ செ.தி.ப | **நேரடியாக சந்தையில் பொருட்கள் மற்றும் ஆலோசனை சேவை அல்லாத சேவைப் பெறுகைகள்**<br>• போட்டிகரமான விலை மனுக் கோரல் போதியளவு அமையாத பட்சத்தில்.<br>• பெறுகையில் சிக்கனமானது தொடர்பாக பி.க.வ.உ / தி.பெ/ செ.தி.ப உறுதிப்படுத்தப்பட வேண்டும்.<br>• இவ் அதிகாரம் பி.நி.உ/ தி.பெ/ செ.தி.ப இன் தனிப்பட்ட மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டியதுடன் வேறு நபர் ஒருவருக்குப் பொறுப்பளிக்கக் கூடாது. | ரூபா. 100,000 வரை |
| தி.பெ/ செ.தி.ப | **மோட்டர் வாகனம் மற்றும் ஏனைய உபகரணங்களை பழுது பார்த்தல்**<br>• போட்டிகரமான விலை மனுக் கோரல் போதியளவு அமையாத பட்சத்தில்.<br>• பெறுகையில் சிக்கனமானது தொடர்பாக பி.க.வ.உ / தி.பெ/ செ.தி.ப உறுதிப்படுத்தப்பட வேண்டும்.<br>• இவ் அதிகாரம் பி.நி.உ/ தி.பெ/ செ.தி.ப இன் தனிப்பட்ட மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டும்.<br>• ரூபா. 200,000 ஐ விடத் தாண்டாத பழுதுபார்ப்பிற்காக பி.க.உத்தியோகத்தரின் தனிப்பட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். | ரூபா. 200,000 வரை |
| தி.பெ யினால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதேசப் பொறுப்பாளர்கள் அல்லது உரிய பிரிவு / பிரிவிற்குப் பொறுப்பாகச் செயற்படும் உத்தியோகத்தர்கள் | **ஒரு தினத்தில் ஒரு பணிக்காக ரூபா 15,000 ஐத் தாண்டாதவாறு சிறுபெறுமதிகள் கொண்ட உபகரணங்கள் உட்பட பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு**<br>• ஒரு மாதத்திற்குள் மேற்கொள்ளப்படும் இவ்வாறான கொள்வனவுகளின் மொத்தம் ரூபா. 60,000 ஐத் தாண்டாது இருக்க வேண்டும் | ரூபா. 15,000 வரை |
| | மாதமொன்றிற்கு ரூபா. 50,000 ஐத் தாண்டாத மேட்டார் வாகனங்களின் பழுதுபார்ப்பு | ரூபா. 50,000 வரை |

R.M.M.Rathnayaka
Chief Finance Officer

S.P.N.Samarasingha
Chief Accountant

02 பெறுகைச் செயற்பாட்டுக்குப் புறம்பாகச் செயற்படுவதற்கான அதிகார எல்லைகள்

இலங்கை அரசின் நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் பெறுகைகளுக்குரியதாக அவசர மற்றும் மிக விசேடமான விடயங்கள் காரணமாக உரிய பெறுகைச் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கு புறம்பாகச் செயற்படத் தேவையான பட்சத்தின் கீழ் பணிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குட்பட்டு அதற்காக அதிகாரத்தை வழங்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதனைத் தெளிவாக எழுத்து மூலம் அறிக்கைப்படுத்த வேண்டியதுடன் அதன் பிரதியை கணக்காய்வாளருக்கு அனுப்ப வேண்டும்.

| உரிய அதிகாரம் | பெறுகைச் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்குப் புறம்பாக செயற்படுவதற்கான அதிகார எல்லைகள் |
|---|---|
| திணைக்களப் பொறுப்பாளர் (அவரின் தனிப்பட்ட அங்கீகாரம் கிடைக்க வேண்டும்) | ரூபா. 250,000 வரை |
| திணைக்களப் பெறுகைக்குழு | ரூபா. 5 மில்லியன் வரை |
| அமைச்சின் பெறுகைக் குழு | ரூபா. 10 மில்லியன் வரை |
| அமைச்சரவை | ரூபா. 10 மில்லியன் வரை |
| | |

அங்கீகரிப்பதற்கான அதிகாரம்

ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் பெறுகைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிந்துரை/ தீர்மானங்களுக்காக கீழ் குறிப்பிடப்பட்ட அதிகாரத்தின் (அதிகாரத்தை வழங்குவது தொடர்பில் நி.ஓ 135 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்குட்பட்டு) அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

| | |
|---|---|
| பிரதேச பெறுகைக்குழு | திணைக்களப் பொறுப்பாளர் |
| செயற்திட்டப் பெறுகைக்குழு | பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் |
| திணைக்களப் பெறுகைக்குழு | |
| அமைச்சின் பெறுகைக் குழு | |
| அமைச்சவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு | அமைச்சரவை |

அமைச்சின் பெறுகைக்குழு / திணைக்களப் பெறுகைக்குழு / செயற்திட்டப் பெறுகைக்குழுவின் அதிகார எல்லைக்கு கீழ்பட்ட பெறுமதிகொண்ட பெறுகைச் செயற்பாடுகளுக்காக சிறுகுழு/ குழுவை நியமிக்க பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தருக்கு முடியும். அச்சந்தர்ப்பத்தில் பெறுகை ஒழுங்கு விதிக்கோவையின் 2.7.4, 2.7.5 மற்றும் 2.7.6 இன் கீழ் குறிப்பிடப்பட்ட குழு உள்ளீடுகளை மாற்றியமைக்க பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தருக்கு முடியும்.

R.M.M.Rathnayaka
Chief Finance Officer

S.P.N.Samarasingha
Chief Accountant